தமிழ்
மரபு
அறக்கட்டளை
பன்னாட்டு
அமைப்பு

# திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

திருவள்ளுவர் ஆண்டு 2053,
ஆவணி/புரட்டாசி
செப்டம்பர் 2022 - செய்தி மடல் 28

பொறுப்பாசிரியர்:
**குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)**

Websites : https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Google Groups : Mintamil Google Group

Facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar
மின்தமிழ்–minTamil

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai


**கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**
*(அதிகாரம்: சான்றாண்மை; குறள்: 981)*



அனைவருக்கும் வணக்கம்.

அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முழுவதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன. அவை பற்றிய சுருக்கமான செய்திகளை திணை இதழ் வழியாகப உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

செப்டம்பர் மாதம் தமிழகத்தில் சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பெரியவர்கள் பிறந்த அல்லது நினைவு மாதமாக அமைகிறது. அந்த வகையில் வ. உ. சிதம்பரனார், அறிஞர் அண்ணா, ரெட்டமலை சீனிவாசன், தந்தை பெரியார், திரு வி கல்யாணசுந்தரனார் போன்றோரை இந்த மாதத்தில் அவர்களது செயற்பாடுகளுக்காக நாம் சிறப்பிக்க வேண்டுமல்லவா ?



கடந்த ஆண்டு தமிழக அரசு பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் தேதியை சமூக நீதி நாளாக கடைபிடிக்கப்படும் என அறிவித்து அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் சமூக நீதி நாள் கொண்டாடப்பட்டது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு உலகளாவிய தமிழ் மக்கள் சமூக அளவில் தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்திய பெரியோர்களின் சிந்தனைகளை கலந்துரையாட வேண்டும் என்று சிறப்பு சொற்பொழிவுகளை இந்த செப்டம்பர் மாதத்தில் ஏற்பாடு செய்திருந்தோம். இவை மிக முக்கியமாக கடந்த நூற்றாண்டின் சமூக வரலாற்று மாற்றத்தை இக்கால தலைமுறையினர் தெளிவுடன் அணுகுவதற்கு மற்றும் புரிந்து கொள்வதற்கும் உதவும் வகையில் அமைந்தது என்பதில் தமிழ் மரபு அறக்கட்டளை மகிழ்ச்சி கொள்கிறோம்.




தமிழர் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுகின்ற விளையாட்டுகளை நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம் என்று சொல்வது மிகையல்ல. பல்லாங்குழி, கல்லாங்காய் ஆகிய இரண்டு வித தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளைக் காணொளி வழியாக பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் இரண்டு காணொளிகள் இந்த மாதத்தில் வெளியீடு கண்டன.




மண்பாண்டங்களின் சிறப்புகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்னையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மண்பாண்ட உற்பத்தி மற்றும் விற்பனை போன்றவற்றை விவரிக்கும் வகையிலான ஒரு காணொளியும் இதே செப்டம்பர் மாதத்தில் தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு செய்தோம். இப்படி பல்வேறு செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.



ஒவ்வொரு மாதமும் நிகழும் அனைத்து செய்திகளையும் அறிந்து கொள்ள திணை மாத இதழை வாசிப்பீர்.

தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இணைந்து தமிழ்ப்பணியாற்ற தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

**அன்புடன்**
**முனைவர் க. சுபாஷிணி**
(தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு)

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

**2022 செப்டம்பர் மாத நிகழ்வுகள்**

திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சிகள்

| தேதி | நேரம் | கிழமை | உரையாளர் | உரை தலைப்பு |
|---|---|---|---|---|
| 06/09/2022 | 6:00 PM | செவ்வாய் | திரு. ரெங்கையா முருகன் | **"ஆராலும் என்னை அமட்ட ஒண்ணாது !"- வ.உ.சி. 151 ஆவது பிறந்தநாள் சிறப்புரை** https://youtu.be/SURd_ydEsss |
| 15/09/2022 | 8:00 PM | வியாழன் | வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன் | **அறிஞர் அண்ணா: தமிழக அரசியல் வரலாற்றின் திருப்புமுனை!** https://youtu.be/S0y0uxS3How |
| 18/09/2022 | 7:00 PM | ஞாயிறு | வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன் | **கரிசல் இலக்கியப் பிதாமகன் கி.ரா. நூற்றாண்டு விழா சிறப்புரை** https://youtu.be/fp9TlRNWkr8 |
| 21/09/2022 | 6:00 PM | புதன் | பேராசிரியர் அ. கருணானந்தன் | **பெரியாரின் சிந்தனைப் புரட்சி! - ஈ.வெ.ரா. பிறந்தநாள் சிறப்புரை** https://youtu.be/-TndlA65E0k |
| 24/09/2022 | 7:00 PM | சனி | வழக்கறிஞர் மு.சத்தியவாணி | **'போக்சோ சட்டம் – ஓர் பார்வை'** https://youtu.be/jSqU_veHBik |

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

**2022 செப்டம்பர் மாத முக்கிய பகிர்வுகள்**

**தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி வெளியீடு: தமிழரின் மரபு விளையாட்டுகள்**

**பல்லாங்குழி விளையாட்டு:**

பலகை ஒன்றில் இரு வரிசைகளில், வரிசை ஒன்றுக்கு ஏழு குழிகள் இருக்கும் பல்லாங்குழி விளையாட்டை சென்ற நூற்றாண்டில் விளையாடாத பள்ளி மாணவர் எவருமே இருந்திருக்க வழியில்லை. இருவர் விளையாடும் இந்த விளையாட்டில் சோழிகளோ அல்லது புளியங்கொட்டைகளோ காய்களாகப் பயன்படுத்தப்பட்டு கோடை விடுமுறையில் சிறுவர்கள் பொழுது போக்காக விளையாடுவார்கள். தமிழரின் மரபு விளையாட்டான பல்லாங்குழி விளையாட்டு உலகில் பல பகுதிகளிலும் பற்பல பெயர்களில், பல்வேறு விதி முறைகளுடன் விளையாடப்படும். பண்டைக்கால வணிகப் பரவல்கள் இதற்குக் காரணமாக அமையும் என்று கருதப்படுகிறது.

ஏழும் ஏழும் பதினான்கு சோலைத் தச்சன் செய்த வேலை அது என்ன? எனும் விடுகதைக்கு விடை: பல்லாங்குழி. எந்தக் குழிக் காய்களை எடுத்து விளையாடினால் ஆட்டத்தில் வெல்லலாம், முத்து, பாண்டி, புதையல் எல்லாம் கிடைக்கும் என்று பலவகைகளில் மனக்கணக்கு போடும் வழக்கம் பயிற்சியில் தானே வந்துவிடும்.

"எண்ணிக்கை, மனக்கணக்கு பயிற்சி"

"இருக்கும் இடத்திலிருந்து இல்லாத இடத்தில் செல்வத்தைச் சரியாகப் பகிர்ந்து அளிக்க வேண்டும்"

"வாழ்வில் வெற்றியையும் தோல்வியையும் எதிர்கொள்வது, விளையாட்டை விளையாட்டாக மட்டும் பழகப வேண்டும்"

போன்ற பண்புகளை விளையாட்டாகவே சிறுவயதில் வளரும் பருவத்தினருக்குப் பயிற்சியளிக்கப் பல்லாங்குழி விளையாட்டு உதவும். தமிழ் மரபு அறக்கட்டளையின் உறுப்பினர்கள் முனைவர் பாப்பா அவர்களும், ப்ரீத்தி அவர்களும் பல்லாங்குழியில் 'கல்யாணப் பாண்டி' அல்லது 'குலுக்குப் பாண்டி' என்ற வகை விளையாட்டை விளையாடுகிறார்கள். திருமணநாள் மாலை நலுங்கு நிகழ்ச்சியில் மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் விளையாடும் ஒரு பல்லாங்குழி விளையாட்டு முறையை விளக்குகிறார் கற்றுத் தரும் முனைவர் பாப்பா.



காணொளி : **https://youtu.be/z09eU3x0xWs**

**2022 செப்டம்பர் மாத முக்கிய பகிர்வுகள்**

**தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி வெளியீடு: தமிழரின் மரபு விளையாட்டுகள்**

**'ஏழுகல்' விளையாட்டு:**

ஏழுகல் என்பது தமிழகத்தின் மரபு விளையாட்டுகளில் ஒன்று. சற்றொப்ப ஒரே அளவுள்ள, கொஞ்சம் உருண்டையான சிறிய கூழாங்கற்களை ஆட்டக் காய்களாகப் பயன்படுத்தி விளையாடும் சிறுவர்களின் விளையாட்டு. தட்டாங்கல் ஆட்டம் எனவும் இதைக் கூறும் வழக்கம் உண்டு. சங்ககாலத்தில் இதன் பெயர் தெற்றி. வெவ்வேறு எண்ணிக்கையில் கற்களும், விளையாட்டு வகைகளும், ஆட்டத்தின் போது பாடப்படும் பாடல் வகைகளும் பல வழக்கத்தில் உள்ளன.

பொதுவாக ஏழுகல் ஆட்டமுறையை பலர் அறிந்திருப்பர். ஏழு கற்களையும் கீழே விரித்தவாறு தரையில் போட்டுவிட்டு அவற்றில் 'தாய்ச்சிக்கல்' என்று ஒரு கல் தேர்வு செய்யப்படும். தாய்ச்சிக் கல்லை மேலே தூக்கிப்போட்டுவிட்டு அது கீழே வருவதற்குள், தரையில் கிடக்கும் கற்களில் ஒன்று, இரண்டு, மூன்று என ஆடப்போகும் ஆட்டத்தின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு சரியான எண்ணிக்கையில் தேவையான கற்களைக் கூட்டி எடுத்து கீழேவிழும் தாய்ச்சிக் கல்லுடன் சேர்த்துப் பிடிக்க வேண்டும். காய்களைத் தவற விடாமலும் பிற கற்கள் அலுங்காமலும் விளையாடவேண்டும் என்பது விதி. தவறினால் அடுத்தவர் முறையாக விளையாட்டு தொடரும்.

விளையாடும்போது எண்ணிக்கைக்கு ஏற்ப பாடல்கள் பாடப்படுவதுண்டு. பாடப்படும் பாடல்கள் ஒண்ணான், இரண்டான், மூன்றான், நான்கான், ஐந்தான், ஆறான், ஏழான், எட்டான், ஒன்பதான், பத்தான், கட்டை என்று ஆட்டம் நிறைவுறும். பொதுவாக வழக்கத்தில் பலர் அறிந்த பாடல்களும், இட்டுக்கட்டிப் பாடப்படும் பாடல்களும் உண்டு. இக்காணொளியில் தமிழ் மரபு அறக்கட்டளை குழுவினர் ஏழுகல் விளையாட்டை விளையாடிக் காண்பிக்கிறார்கள். முனைவர் பாப்பா எண்ணிக்கைக்கு ஏற்ப பாடல்களைப் பாடிக் காட்டுகிறார்.



காணொளி : https://youtu.be/Bdupf0gF_w8

**2022 செப்டம்பர் மாத முக்கிய பகிர்வுகள்**

**தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி வெளியீடு: நாட்டார் மரபு கைவினைக் கலைப் பொருட்கள்**

**களிமண் கைவினை பொருட்கள்:**

நாட்டார் மரபு கைவினைக் கலைப் பொருட்களில் ஒரு வகை களிமண்ணால் செய்யப்படுபவை. இது மிகவும் பழைமை வாய்ந்த கலை என்பதற்குச் சான்றாக இன்று தொல்லியல் அகழாய்வுகளில் மண்பாண்டப் பொருட்கள், சுடுமண் சிற்பங்கள், முதுமக்கள் தாழிகள் கிடைக்கப் பெற்று வருவதைக் கூறலாம். மண்சார்ந்த தொழில்களை மேற்கொள்வோரை 'மண்ணீட்டாளர்' என்றும் ' வேட்கோவர்' என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகிறது. 'மண்மாண் புனைபாவை' என்று சுடுமண் சிற்பங்கள் குறிக்கப்படுகின்றன.

தமிழகத்தில் மண்ணாலான புழங்கு பொருட்களான மண் சட்டி, பானை, அடுப்பு, தோண்டி, குடம், கலயம், விளக்கு, முகூர்த்தப் பானை, தாளப் பானை, கடம், பூந்தொட்டி, அகல் என்று பலவகையான பொருட்களோடு சுடுமண் சிற்பங்களையும் கலைத் தன்மையோடு உருவாக்கி வருகின்றனர் இக்கைவினைஞர்கள். மண் சார்ந்த இக்கைவினைப் பொருட்கள் கலைப் பொருட்களாக மட்டுமின்றித் தமிழரின் வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் பிரிக்க முடியாத கூறாகவும் அமைந்துள்ளன.

சென்னை கைவினைக் கலைப் பொருட்கள் கடை ஒன்றில் மட்பாண்டம் செய்யும் முறை, அவற்றுக்குத் தேவையான பொருட்கள் ஆகியவற்றைக் காணொளியாக ஆவணப்படுத்தியுள்ளனர் தமிழ்மரபு அறக்கட்டளை குழுவினர். இதற்கு உதவிய 'குயவன் மண்டபம்' கோபிநாத் குழுவினருக்கு நன்றி.




காணொளி : https://youtu.be/mxvJSiXEn1E

**2022 செப்டம்பர் மாத முக்கிய பகிர்வுகள்**

**தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி வெளியீடு: நாட்டார் மரபு கைவினைக் கலைப் பொருட்கள்**















தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi


திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சி

**“ஆராலும் என்னை அமட்ட ஒண்ணாது !”**
**வ.உ.சி. 151 ஆவது பிறந்தநாள் சிறப்புரை**

**திரு. ரெங்கையா முருகன்**

வ.உ.சி. ஆய்வாளர்
சென்னை, தமிழ்நாடு

திசைக் கூடல் நிகழ்வு #301




செப்டம்பர் – 6, 2022 – செவ்வாய்- மாலை 6:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/SURd_ydEsss**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

**அறிஞர் அண்ணா: தமிழக அரசியல் வரலாற்றின் திருப்புமுனை!**

**வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**

தலைமைக்கழக செய்தித்தொடர்பு செயலாளர், தி.மு.க.
மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்
ஆசிரியர் - "கதைசொல்லி" காலாண்டிதழ்
எழுத்தாளர் மற்றும் கட்டுரையாளர்

திசைக் கூடல் நிகழ்வு #302




செப்டம்பர் – 15, 2022 – வியாழன் மாலை 08:00 இந்திய நேரம்

காணொளி : [https://youtu.be/S0y0uxS3How](https://youtu.be/S0y0uxS3How)

**கரிசல் இலக்கியப் பிதாமகன் கி.ரா. நூற்றாண்டு விழா சிறப்புரை**

**வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**

தலைமைக்கழக செய்தித்தொடர்பு செயலாளர், தி.மு.க.
மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்
ஆசிரியர் - "கதைசொல்லி" காலாண்டிதழ்
எழுத்தாளர் மற்றும் கட்டுரையாளர்

திசைக் கூடல் நிகழ்வு #303




செப்டம்பர் – 18, 2022 – ஞாயிறு– மாலை 7:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/fp9TlRNWkr8**

**பெரியாரின் சிந்தனைப் புரட்சி!**
**ஈ.வெ.ரா. பிறந்தநாள் சிறப்புரை**

**பேராசிரியர் அ. கருணானந்தன்**

வரலாற்றுத் துறைத்தலைவர் (பணி நிறைவு)
விவேகானந்தா கல்லூரி
சென்னை, தமிழ்நாடு

திசைக் கூடல் நிகழ்வு #304




செப்டம்பர் – 21, 2022 – புதன்– மாலை 06:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/-TndlA65E0k**

**'போக்சோ சட்டம் – ஓர் பார்வை'**

**மு.சத்தியவாணி**

வழக்கறிஞர்
உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு

திசைக் கூடல் நிகழ்வு #305




செப்டம்பர் – 24, 2022 – சனி மாலை 07:00 இந்திய நேரம்

காணொளி : **[https://youtu.be/jSqU_veHBik](https://youtu.be/jSqU_veHBik)**

தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.

தமிழால் இணைவோம்!

---

தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

---

தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

---

"கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

---

சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

## நல்ல சிந்தனை:

*கால் தூய்மை இல்லாக் கலி மாவும், காழ் கடிந்து*
*மேல் தூய்மை இல்லாத வெங் களிறும், சீறிக்*
*கறுவி வெகுண்டு உரைப்பான் பள்ளி,-இம் மூன்றும்*
*குறுகார், அறிவுடையார்.*

- திரிகடுகம்

**பொருள்:** நடக்க இயலாத குதிரையும், கட்டுத்தறியை முறித்து வீரனிருப்பதற்கேற்ற மேலிடம் தூய்மை இல்லாத பயன்படாத யானையும், மாணவர்கள் மேல் சீற்றம் கொண்டு உரைக்கும் கல்விச் சாலையும் அறிவுடையார் சேர மாட்டார்.